பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 13 வெள்ளிக்கிழமை 26.03.2021 கதிர் 09

## 8,69,709 பேருக்கு தடுப்பூசி ஏற்றல்

இலங்கையில் கடந்த ஜனவரி 29ஆம் திகதி முதல் நேற்று வரை 8 லட்சத்து 69 ஆயிரத்து 709 பேருக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

நேற்று மாத்திரம் 13 ஆயிரத்து 382 பேருக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# சிறிதரன் எம்.பியின் மகன் மீது தாக்குதல்

### யாழிலுள்ள வீட்டில் வாள், இரும்புக் கம்பிகளுடன் இனந்தெரியாத குழு இன்று பிற்பகல் அட்டகாசம்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் மூத்த மகன் சாரங்கன் மீது இனந்தெரியாத குழு இன்று பிற்பகல் தாக்குதல் நடத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிற்கு அண்மையிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் வீட்டுக்குள் வாள், கண்ணாடிப் போத்தல், இரும்புக் கம்பிகளுடன் ☞2

# ‘கொரோனா’ அபாயத்தால் யாழ். மாநகர மத்தி முடக்கம்

### கிருமி நாசினி விசுறும் பணிகள் முன்னெடுப்பு; வீதிகளில் இராணுவம், பொலிஸ் களமிறக்கம்








(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாநகரின் மத்திய பகுதி இன்று முதல் 10 நாட்களுக்கு முடக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு கிருமி நாசினி விசுறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்த நிலையில் நேற்று மாலை மாவட்ட கொரோனா தடுப்புச் செயலணியின் அவசரக் கூட்டம் இடம்பெற்றது ☞2

## வவுனியா குளத்தைப் பாதுகாக்க மக்கள் அறவழியில் போராட்டம்!



(வவுனியா நிருபர்)

சுற்றுலா மையம் என்ற பெயரில் ‘வவுனியா குளம்’ ஆக்கிரமிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு கோரி வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா குளத்துக் ☞2

## வடக்கு கடற்பரப்பில் கைதான இந்திய மீனவர்கள் விடுதலை

### தூதரகத்தின் அழுத்தத்தையடுத்து



(ந.லோகதயாளன்)

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் இலங்கைக் கடற்படையினரால் கைதாகிய 54 இந்திய மீனவர்களில் 40 பேர் அவர்களின் படகுகளுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ☞2

## புத்தூர் அகழ்வாராய்ச்சி மக்களின் கடும் எதிர்ப்பால் இடைநிறுத்தம்!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட புத்தூர் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தால் இன்று முன்னெடுக்கப்பட்ட அகழ்வாராய்ச்சி நடவடிக்கை மக்களின் கடும் எதிர்ப்பை அடுத்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதத்தில் அகழ்வாராய்ச்சிப் பணிகளுக்காக அதிகாரிகள் இந்தப் பகுதிக்குச் சென்றிருந்தபோது, ☞2

## கொழும்பு மாவட்டத்தில் இதுவரை 31,133 பேருக்கு கொரோனா உறுதி

### யாழில் 820 பேருக்குத் தொற்று

கொழும்பு மாவட்டத்தில் இதுவரையில் 31 ஆயிரத்து 133 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இம்மாவட்டத்தில் நேற்று 64 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று 77 பேருக்குக் கொரோனா வைரஸ் ☞2

## அரசுக்குள் வெட்டு, குத்து!

### சு.க. கவலை



அரச கூட்டணிக்குள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பாரபட்சம் தொடர்கின்றது. அது இன்னும் குறையவே இல்லை.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் ☞2

### உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

## தன் மீதான குற்றச்சாட்டுகளை மைத்திரி அடியோடு நிராகரிப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைத் தடுக்கத் தவறியதாக தன் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார்.

இலங்கையில் போர்க்காலத்திலும் இது போன்ற தாக்குதல்கள் நடந்துள்ளன எனவும், அவை பயங்கரவாதத் தாக்குதல்கள் என்பதால் அதிகாரிகளுக்கு அதில் ☞2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன் மீதான.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொறுப்புக்கூறல் இருக்கவில்லை எனவும், அதே போன்றே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலையும் பார்க்க வேண்டும் எனவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2015இல் ஜனாதிபதியாக நான் பதவியேற்ற பின்னர் தேசிய பாதுகாப்பைப்பலவீனப்படுத்துவதற்கு இடமளிக்கவில்லை. துரதிஷ்டவசமாகவே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடந்துள்ளது.

அந்தக் காலப்பகுதியில் ஐ.எஸ். இயக்கத்தால் உலக நாடுகளில் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வந்தன. அது தொடர்பாக தேசியப் பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் கலந்துரையாடி, அதுபோன்ற தாக்குதல் இலங்கையில் நடப்பதை தடுக்குமாறு அதிகாரிகளுக்குக் கூறியிருந்தேன்.

எவ்வாறாயினும் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி - உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற தாக்குதல் தொடர்பாக, அதற்கு முன்னர் புலனாய்வுத் தகவல் கிடைத்திருந்த நிலையில், அந்தத் தகவல் புலனாய்வு அதிகாரிகளுக்கிடையே பகிரப்பட்டிருந்த போதும், தாக்குதல் நடந்து முடியும் வரையில் அது பற்றி எனக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை - என்றார்.

## கொழும்பு மாவட்டத்தில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொற்றியுள்ளது எனவும் சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது. இம்மாவட்டத்தில் இதுவரை 820 பேர் கொரோனாவுக்கு இலக்காகியுள்ளனர் எனவும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## வடக்கு கடற்பரப்பில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவர்கள் மன்னார் மற்றும் முல்லைத்தீவு கடற்பரப்பில் கைதானவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணக் கடற்பரப்பில் கைதாகிய 14 மீனவர்களுக்கும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமையால் அவர்கள் எதிர்வரும் 8ஆம் திகதி வரை காரைநகர் கடற்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படாத கைதாகிய 40 மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் அழுத்தத்தையடுத்து குறித்த மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(முன்னர் வந்த செய்தி 4 ஆம் பக்கத்தில்)

## புத்தூர் அகழ்வாராய்ச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையால் அதிகாரிகள் அங்கிருந்து திரும்பிச் சென்றிருந்தனர்.

இந்தநிலையில், மீண்டும் இன்று அங்கு வந்த அதிகாரிகள் நிலத்தைத் தோண்டியுள்ளனர்.

இதன்போது அங்கு கூடிய பொதுமக்களும், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் உள்ளிட்ட உறுப்பினர்களும் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதையடுத்து அகழ்வாராய்ச்சிப் பணிகளை இடைநிறுத்திய அதிகாரிகள் அங்கிருந்து சென்றுள்ளனர்.

## அரசுக்குள் வெட்டு.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜய சேகர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் மைத்திரிபாலசிறிசேனதலைமையில்நேற்றிரவு அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

கூட்டம் முடிவடைந்த பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இது நாம் உருவாக்கிய அரசு. அதனுடன் இணைந்து பயணிக்கவே விரும்புகின்றோம். தேர்தலிலும் கூட்டணியாகவே பயணிக்க உத்தேசித்துள்ளோம். எனினும், கட்சிக்கு அநீதி இழைக்கப்பட்டால் தொடர்ந்தும் மௌனம் காக்க முடியாது - என்றார்.

## 'கொரோனா' அபாய.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தின்போது பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கில் யாழ். நகரப் பகுதியில் அதிகளவான பொலிஸார், இராணுவத்தினர், சுகாதாரத் துறையினர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இன்று களமிறக்கப்பட்டனர்.

## சிறிதரன் எம்.பியின்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நான்கு மோட்டார் சைக்கிள்களில் முகத்தை மறைத்தவாறு வந்த 8 பேர் எம்.பியின் மூத்த மகன் மீது கடுமையான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

அவரது மோட்டார் சைக்கிளையும், வீட்டில் இருந்த பொருள்களையும் குறித்த கும்பல் சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது

குறித்த குழுவினரின் வீடியோ காட்சிகள் வீட்டில் பொருத்தியிருந்த சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளன. அவர்கள் வந்திருந்த 4 மோட்டார் சைக்கிள்களின் இலக்கங்களும் சி.சி.ரி.வி. கமராவில் தெளிவாகப் பதிவாகியுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியா குளத்தைப்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கான மக்கள் செயலணின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

போராட்டத்தில் பொது அமைப்பினர், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

வவுனியாவிலுள்ள குளங்களும் விவசாய நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்டு தங்களின் கண் முன்னாலேயே அவை இல்லாமல் செய்யப்படுகின்றன என்று போராட்டத்தில் ஈடுபடுவோர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாமாவட்டத்தின்குடிதண்ணீர் தேவைக்கான நிலத்தடி நீர், விவசாய நீர்ப்பாசனம் மற்றும் கால்நடை வளர்ப்புக்கும் குளங்களே ஆதாரமாக உள்ளன எனவும், இந்நிலையில் சுற்றுலா மையம் என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளால் குளங்கள் வற்றிப் போகும் அபாயம் உருவாகியுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கையுடன் தொடர்புடையவர்கள் நகர சபையுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளை மீறிக் கட்டடங்களை அமைத்துள்ளனர் எனவும் போராட்டத்தில் ஈடுபடுவோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வவுனியாக்குளம் மீதான ஆக்கிரமிப்பு உடனடியாக நிறுத்தப்படவேண்டும் எனவும், இல்லாவிட்டால் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுப்போம் எனவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (100)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# ஒப்புக்குச் சப்பாணி

கொரோனா அரக்கனுடன் போராடுவது என்பது வெறும் வாய்ச் சவடால் விவகாரம் அல்ல. வாய்ப் பந்தல் மூலம் நடத்தி விட முடியாது. செயலில் காரியமாற்ற வேண்டிய விவகாரம்.

தனிமனித நடத்தைகளில் அது தங்கியிருந்தாலும், தனி மனிதர்கள் மூலம் மட்டுமே கொரோனாவை எதிர்த்துப் போராடி அதனைச் சாதித்து விட முடியாது. தனி மனித நடத்தைகளும் கூட்டுச் செயற்பாடுகளும் இணைய வேண்டிய கட்டாய கடப்பாடு அதில் தங்கியுள்ளது.

இந்த முயற்சியை 'ஒப்புக்குச் சப்பாணி' என்பது போல காரிய மாற்றுவது போல நடத்தி விடவும் இயலாது. யாவரும் ஒன்றுபட்டுக் காரியமாற்றினால் மட்டுமே கொரோனா பேரரக்கன் என்ற மரணச் சவாலை சமூகம் எதிர்கொண்டெழ முடியும்.

இன்று, கண்ணுக்குத் தெரியாத நுண்மியிடம் யாழ் குடாநாடே வீழும் அவல நிலைமை. ஆனால் அதை எதிர்கொள்வதற்கான திட்டங்களை வகுத்துச் செயற்படுவதில் மெத்தனப்போக்கு.

கொரோனாவை எதிர்கொள்வதற்குப் பிரதானமானது கூட்டுச் செயற்பாடு. இதில் தனியர்களை, குடும்பங்களை, வீதிகளை, குறிச்சிகளை, கிராமங்களை, நகரங்களை ஒன்றிணைக்கும் பொறுப்பு அதிகாரிகளிடம்.

அந்த அதிகாரிகளும் பல்துறைகளைச் சேர்ந்தவர்கள். மாவட்டத்தைப் பொறுத்தவரை மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள், சுகாதாரத் துறையினர், படையினர், பொலிஸார் என இன்னோரன்ன தரப்பினரை மக்களுடன் ஒன்றிணைத்துச் செயற்பட வைக்கும் வித்தை இது. அதனை செப்படி வித்தையாக முன்னெடுக்க முடியாது.

ஆனால், யாழ்ப்பாணத்தில் விடயங்கள் அப்படித்தான் முன்னெடுக்கப்படுகின்றனவோ என்ற ஆதங்கம் – கேள்வி – யாழ் நகரில் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒட்டிக் கட்டவிழும் விடயங்கள் கிளப்பி நிற்கின்றன.

நேற்று யாழ்ப்பாணத்தில் திடீரென தொற்று எண்ணிக்கை எகிறியமையை அடுத்து அவசர அவசரமாகத் தீர்மானம் எடுப்பதற்காக அதிகாரிகள் கூடினர். அவர்களின் பொறுப்புணர்வு மெச்சத்தக்கது.

அந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்துடன் தொடர்புடைய யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலாளர்கள் காணப்படவில்லை. இலங்கை போக்குவரத்துச் சபை, தனியார் பஸ் போக்குவரத்துச் சங்கங்கள், ஒட்டோச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் எவரும் இல்லை. பஸ் நிலையத்தை இடம் மாற்றுவது உட்பட பல தீர்மானங்கள் எடுக்கப்படும் கூட்டத்துக்கு அவர்களை அழைக்கவில்லை என்றால் அத்தகைய தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் வரும் சிக்கல்கள், மாற்று ஏற்பாடுகள் குறித்து எப்படி ஆராய்ந்து தீர்வு காண்பது?

அது மாத்திரமல்ல, எட்டப்பட்ட முடிவுகளை வெறும் பத்திரிகையாளர் மாநாடு நடத்தி அறிவித்து விட்டால் போதும் என்று அமைந்து விடக் கூடாது.

குறுகிய கால முன்னறிவித்தல் – திடீர் ஏற்பாடு – அவசர அவசரமாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் என்பவை எல்லாம் விளங்குகின்றன.

ஆனால், யாழ் நகரத்தின் நன்மை கருதி, உள்ளதுக்குள் வள்ளிசாக எடுக்கப்பட்ட முடிவுகளை வெற்றிகரமாக முன்நகர்த்துவதாயின் அதற்கு முக்கியமானது மக்களின் முழுப் பங்களிப்பும் ஒத்துழைப்பும். அதற்கு அவசியமானது, அதிகாரிகள் மட்டத்தில் தடுப்பு நடவடிக்கைகள் என்று எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மக்களைச் சென்றடைய வேண்டும்; சம்பந்தப்பட்ட தரப்புகளை எட்ட வேண்டும்.

அதற்கு, ஊடகங்களை உரிய முறையில் வழிப்படுத்தி, அதிக பயனை ஈட்டுவது அதிகாரிகளின் சாமர்த்தியம்.

யாழ் நகர மத்தியில் வீதி முடக்கம், பிரதேச தடுப்புகள் குறித்து ஒவ்வொரு ஊடகத்தில் ஒவ்வொரு மாதிரி செய்தி வெளியாகியிருந்தது. தடுக்கப்பட்ட, முடக்கப்பட்ட பிரதேசங்கள், வீதிகள் குறித்தும் வித்தியாசமான மாதிரி வரைவுகள் வெளியாகியிருந்தன. அது ஊடகங்களின் தவறாக இருக்கக் கூடும். எனினும் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து குறைந்த பட்சம் கையால் கீறிய ஒரு வரைபடத்தையாவது அதிகாரிகள் கையளித்திருந்தால் இத்தகைய குழப்பத்தை தவிர்த்திருக்கலாம்.

இன்று காலையில் இருந்து இந்தப் பிரதேச முடக்க நடவடிக்கை நடைமுறைக்கு என்றார்கள். ஆனால் சம்பந்தப்பட்ட நகர வீதிகளில் இன்று காலை 8 மணி வரை முடக்க அறிவிப்புகள், தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஒரு ஈ, காக்கை கூட இல்லை. விடயம் தெரியாமல் விவரம் புரியாமல் உள்ள வர்த்தகர்கள் பலர் தமது நிறுவனங்களைத் திறந்து வைத்துப் பணியாற்றத் தொடங்கி விட்டார்கள்.

நேற்று மாலை அவசர அவசரமாக எடுத்த முடிவை இன்று நடைமுறைப்படுத்துவதற்கு குறைந்த பட்சம் விடிகாலை 4 மணிக்கே களத்தில் ஆள்களை இறக்கி முன்னெடுக்கும் தீவிரம் அதிகாரிகளிடம் இருக்கவேயில்லை.

பொலிஸில் தொடங்கி, ஆள், அணி, அம்பு எல்லாம் வைத்துக் கொண்டு பொறுப்பில்லாமல் நடந்த அதிகார வர்க்கத்தினால் இன்று காலையில் நகரில் குழப்ப நிலைமை.

இந்த ஒப்புக்குச் சப்பாணி அணுகுமுறை கொரோனாப் பேரரக்கனை ஒழிக்க உதவ மாட்டாது என்பது மட்டும் திண்ணம்.

# அனைத்து மத்ரஸாக்களும் தடை செய்யப்படமாட்டா!

## சரத் வீரசேகர பல்டி



நாட்டில் உள்ள அனைத்து மத்ரஸாக்களும் தடை செய்யப்படா என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று (வியாழக்கிழமை) உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் 5 முதல் 16 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு மதம் மற்றும் அரபியை மட்டுமே கற்பிக்கும் மத்ரஸாக்கள் தேசிய கல்விக் கொள்கைக்கு எதிரானவை என்பதால் தடை செய்யப்பட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தினார்.

முஸ்லிம் சமுதாயமும் அமைப்புகளும் ஏற்கனவே மத்ரஸாக்களை தடை செய்ய ஒப்புதல் அளித்துள்ளன என்று அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் 16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கற்பிக்கும் மத்ரஸாக்கள் தடை செய்யப்படா எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# காணிப் பிணக்குகளைத் தீர்ப்பதன் ஊடாக விரைவாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாம்!

## உள்ளூர் முயற்சிகள் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ஜானு முரளிதரன் ஆலோசனை

காணி தொடர்பான பிணக்குகளை இலகுவாகத் தீர்த்துவைப்பதன் ஊடாக இனங்களிடையே சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் விரைவாக ஏற்படுத்த முடியும் என சிறந்த எதிர்காலத்துக்கான உள்ளூர் முயற்சிகள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜானு முரளிதரன் தெரிவித்துள்ளார்.

'சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிசெய்யும் காணி பிணக்குகளுக்கான விசேட மத்தியஸ்த முயற்சிகள்' என்னும் தொனிப்பொருளிலான இரண்டு நாள்கள் செயலமர்வு நேற்று (வியாழக்கிழமை) மட்டக்களப்பில் ஆரம்பமானது.

உள்ளூர் முயற்சிகள் அமைப்பின் ஏற்பாட்டில் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளையின் நிதியுதவியுடன் இந்தச் செயலமர்வு ஆரம்பமானது.

செயலமர்வில், உள்ளூர் முயற்சிகள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜானு முரளிதரன், அமைப்பின் திட்ட உத்தியோகத்தர் எஸ்.தயா மற்றும் வளவாளர்கள் கலந்து கொண்டனர்.

பொலிஸ் நிலையங்களால் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லப்படும் வழக்குகள், மத்தியஸ்த சபை ஊடாகத் தீர்த்துவைப்பதற்காக அனுப்பிவைக்கப்படும் நிலையில் குறித்த வழக்குகளை விரைவாகவும் சமூக முரண்பாடுகள் ஏற்படாமலும் தீர்த்துவைப்பதற்கு மத்தியஸ்த சபைத் தலைவர்கள் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையிலான திறன் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இந்தச் செயலமர்வு நடத்தப்படுகிறது.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்படும் அனைத்து மத்தியஸ்த சபைகளைப் பலப்படுத்தி, அதன் சேவைகளை விரிவுபடுத்தவும் மக்கள் அதன்மூலம் விரைவாகவும் சிறப்பாகவும் பயனடையும் வகையிலும் அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு தமது அமைப்பு செயற்படவுள்ளதாக ஜானு முரளிதரன் தெரிவித்துள்ளார்.

# ஐ.நா. தீர்மானம் வெறும் ஏமாற்றமே: தமிழர் தரப்பு ஒன்றிணையவேண்டும்!

## சிவகரன் சுட்டிக்காட்டு



தமிழ்க் கட்சிகள் கூட்டுப் பொறுப்போடும் ஐக்கியத்தோடும் தமிழ் மக்களின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு இணைந்து பணியாற்ற வேண்டும் எனத் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சர்வதேச அரங்கில் இராஜதந்திர ரீதியாக இலங்கைக்கு ஒரு தோல்வியை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணை ஏற்படுத்தியிருக்கின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பிற்கு ஒரு நியாயம் கிடைக்கக்கூடிய வகையில் பிரேரணை இல்லையெனசிவகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மன்னாரில் நேற்று (வியாழக்கிழமை) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும், பூகோள அரசியலின் பிரகாரம் இருதுருவ அரசியல் போக்கின் அடிப்படையில் அமெரிக்கா சார்பு, சீன சார்பு என்கின்ற இரண்டு சார்பு நிலைகளுக்குள் இலங்கை தொடர்பாக பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறைந்தபட்சம் 30/1 தீர்மானத்தினுடைய அளவில்கூட 46/1 தீர்மானத்தின் உள்ளடக்கம் காணப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ள சிவகரன், குறிப்பாக சாட்சியங்களைப் பதிவு செய்தலும் பாதுகாத்தலும் என்கின்ற பொறிமுறையைத் தவிர ஏனைய பொறிமுறைகள் புதிய தீர்மானத்தில் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

மொத்தத்தில் நல்லிணக்கம் என்கின்ற நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகூட இலங்கையில் தோற்றுவிட்ட இந்தச் சூழ்நிலையில் கடந்த 11 ஆண்டுகளில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எவ்வாறான நியாயமும் வழங்கப்படவில்லை.

இந்நிலையில், நிறைவேற்றப்பட்டுள்ள ஐ.நா. தீர்மானத்தை நாங்கள் மகிழ்வுடன் வரவேற்கக் கூடிய நிலையில் இல்லை எனவும் இலங்கையின் போர்க்குற்ற விவகாரம் ஒரு விவாதப் பொருளாக இருக்கின்றது என்பதில் மட்டுமே திருப்திகொள்ள முடியும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த விடயத்தில் இந்தியா நடுநிலை வகித்துள்ளமையை மிக மோசமான செயலாகவே பார்ப்பதாகவும் இவ்வாறு மதில் மேல் பூனையாக இருப்பது மிகவும் வருந்தத்தக்க விடயம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனைவிட, இந்தியாவிற்காகப் பரிந்து பேசுகின்ற தமிழ்க் கட்சிகள் அல்லது வடக்கின் மூன்று தீவுகளை சீனாவுக்குக் கொடுக்கப் போகின்றார்கள் எனப் போராட்டத்தை முன்னெடுத்த தமிழ்க் கட்சிகள் இப்போதும்கூட இந்தியாவிற்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருக்கின்றனர் என்ற சூழல் மிக வேதனையளிப்பதாக சிவகரன் கூறியுள்ளார்.

இந்த சூழ்நிலைகளுக்கு மத்தியில், தமிழர் தரப்பு எதிர்காலத்தில் ஐக்கியமாகவும் ஒற்றுமையாகவும் இணைந்து செயற்பட வேண்டிய பொறுப்பும் தார்மிகக் கடப்பாடும் உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அத்துடன், கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை எதிர்கொண்டுள்ள சமூகம் ஐக்கியத்துடன் இயங்க வேண்டும் எனவும், இல்லாதுவிட்டால் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் விளைவுகளை நாம் எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பங்களாதேஷுக்குப் புறப்பட்டார் பிரதமர் மோடி கொரோனாவுக்குப் பின் வெளிநாட்டுப் பயணம்!



கொரோனா ஊரடங்கிற்குப் பின் முதல் முறையாக பிரதமர் நரேந்திர மோடி வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

2020 ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே இந்தியாவில் கொரோனா பரவல் தொடங்கியதால் அனைத்து நாடுகளுக்குமான விமானப் போக்குவரத்துக்களும் தடை செய்யப்பட்டன. அதன் காரணமாக பிரதமர் மோடி எந்த நாட்டிற்கும் பயணம் மேற்கொள்ளவில்லை. இதன் மூலம் பிரதமருக்கு வெளிநாட்டுப் பயணம் இல்லாத ஆண்டாக 2020 மாறியது.

பங்களாதேஷின் 50 ஆவது சுதந்திர தின விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்க பிரதமர் மோடிக்கு வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா அழைப்பு விடுத்திருந்தார். அழைப்பினை ஏற்றுக்கொண்ட பிரதமர் மோடி 2 நாள் பயணமாக இன்று காலை டெல்லியில் இருந்து பங்களாதேஷுக்கு புறப்பட்டுச் சென்றார்.

சுதந்திர தின பொன்விழா நிகழ்ச்சிகளை அடுத்து பங்களாதேஷின் தந்தை என்று போற்றப்படும் ஷேக் முஜிபூர் ரஹ்மானின் நூற்றாண்டு விழாவில் பிரதமர் மோடி பங்கேற்கிறார். ஜசோரீஸ்வரி காளி கோவிலுக்குச் சென்று வழிபட உள்ள பிரதமர் மோடி ஓரக்கண்டி என்ற இடத்தில் மடுவா சமூகத்தின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசுகிறார். பங்களாதேஷ் அதிபரைச் சந்திப்பதோடு, மற்ற உயர்பொறுப்புகளில் உள்ள அரசுத்தலைவர்களையும் சந்தித்து உரையாடவுள்ளார்.

தனது பயணம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள பிரதமர் மோடி, ‘எனது பயணம், பிரதமர் ஷேக் ஹசீனாவின் தொலைநோக்குத் தலைமையின் கீழ் பங்களாதேஷ் அடைந்துள்ள வியப்பூட்டும் பொருளாதார மற்றும் வளர்ச்சி ரீதியிலான முன்னேற்றங்களுக்குப் பாராட்டுத் தெரிவிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக மட்டுமல்லாமல், இந்தச் சாதனைகளுக்கு இந்தியாவின் நிலையான ஆதரவை அளிக்கும் வகையில் இருக்கும்’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவைச் சென்றடைந்த பிரதமர் மோடிக்கு அந்நாட்டு பிரதமர் ஷேக் ஹசீனா விமான நிலையத்தில் வரவேற்பளித்துள்ளார்.

## வங்கத்திலும் அசாமிலும் நாளை முதற்கட்ட தேர்தல் பிரசாரங்கள் நிறைவு அதிகாரிகள் இடமாற்றம்

மேற்கு வங்கத்தில் 30, அசாமில் 47 தொகுதிகளுக்கு நாளை முதற்கட்ட தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான பிரசாரம் நேற்று மாலை நிறைவடைந்தது.

மேற்கு வங்கத்தில் மொத்தமுள்ள 294 சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல், 8 கட்டங்களாக நடைபெற உள்ளது. இவற்றில் முதற்கட்டமாக 30 தொகுதிகளுக்கான தேர்தல் நாளை நடைபெறுகிறது.

பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கும் புருலியா, பங்குரா, ஜார்க்ராம், பூர்பா மெதினிபூர் உள்பட 30 தொகுதிகளில் தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான பிரசாரத்தில் பா.ஜ.க. சார்பில் பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, பா.ஜ.கவின் முக்கிய தலைவர் நட்டா உள்ளிட்ட பலர் தீவிர பிரசாரம் செய்தனர்.

மேற்கு வங்க முதல்வரான மம்தா பானர்ஜி காலில் காயம்பட்டு உள்ளதால் சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறே பிரசாரம் செய்தார். இந்நிலையில், இம்மாநிலத்தில் முதற்கட்ட வாக்குப்பதிவுக்கான பிரசாரம் நேற்று மாலை நிறைவுக்கு வந்தது.

இதேபோல், மொத்தம் 126 தொகுதிகளை கொண்ட அசாமில் 47 தொகுதிகளுக்கு நாளை முதல்கட்டமாக வாக்குப்பதிவு நடக்கிறது. இதற்கான பிரசாரமும் நேற்று மாலை முடிவடைந்தது.

மேற்கு வங்கத்தில் பண்டபேஸ்வர் தொகுதியின் வேட்பாளரான ஜிதேந்திர திவாரி, ‘தேர்தலில் வெற்றி பெற்றால் அயோத்தி ராமர் கோயிலுக்கு இலவசமாக அழைத்துச் செல்கிறேன்’ என்று வாக்குறுதி கொடுத்தார். இது பற்றி திரிணாமுல் காங்கிரஸார் தேர்தல் ஆணையத்திடம் புகார் அளித்தனர். ‘புனிதப் பயணம் அழைத்துச் செல்வதாகக் கூறுவது விதிமீறல் என்பது எனக்குத் தெரியாது’ என்று இது குறித்து ஆணையத்துக்கு வருத்தம் தெரிவித்து திவாரி பதில் அனுப்பியுள்ளார்.

மேற்கு வங்கத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள காவல்துறை அதிகாரிகள், ஆட்சியாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். ‘ஆளும் கட்சிக்கு சாதகமாக அவர்கள் செயல்படுகிறார்கள் என்ற எதிர்க்கட்சிகளின் தொடர்ச்சியான குற்றச்சாட்டுகள் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது’ என்று தேர்தல் ஆணையம் விளக்கம் அளித்துள்ளது.

## 3,700 கோடி ரூபா வங்கிக் கடன் மோசடி: சென்னை உட்பட 100 நகரில் சி.பி.ஐ. சோதனை




சென்னை, திருவாரூர், வேலூர், திருப்பூர் உட்பட பதினொரு மாநிலங்களைச் சேர்ந்த சுமார் நூறு நகரங்களில், 3,700 கோடி ரூபா வங்கிக் கடன் மோசடி தொடர்பாக சி.பி.ஐயினர் நேற்று அதிரடிச் சோதனை நடத்தினர்.

இது தொடர்பாக சி.பி.ஐ. செய்தித் தொடர்பாளர் ஆர்.சி.ஜோஷி ஊடகங்களுக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

‘வங்கிகளில் போலி ஆவணங்கள் மூலமாக கடன் பெற்றுவிட்டு திருப்பிச் செலுத்தாமல் ஏமாற்றுபவர்களால் பொதுத்துறை வங்கிகளுக்கு பெரிய இழப்பு ஏற்படுகிறது. இது தொடர்பாக, பல புகார்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், 11 மாநிலங்களில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, யூனியன் வங்கி, பரோடா வங்கி, பஞ்சாப் தேசிய வங்கி, எ.ஸ்.பி.ஐ, ஐ.டி.பி.ஐ., கனரா, இந்தியன் வங்கி, இந்திய மத்திய வங்கிகளின் தரப்பில் இருந்து 30இற்கும் மேற்பட்ட பண மோசடிப் புகார்கள் சி.பி.ஐக்கு கிடைக்கப்பெற்றன.

அவற்றினடிப்படையில் சென்னை, திருவாரூர், வேலூர், திருப்பூர், கான்பூர், டெல்லி, காஜியாபாத், மதுரா, நொய்டா, பெங்களூர், குண்டூர், சூரத், ஐதராபாத், பல்லாரி, வதோதரா, கொல்கத்தா, மேற்கு கோதாவரி, மும்பை, போபால், திருப்பதி, விசாகப்பட்டினம், அகமதாபாத், ராஜ்கோட், கர்ணால், ஜெய்ப்பூர் உட்பட 100 நகரங்களில் அதிரடிச் சோதனை நடத்தப்பட்டு வருகிறது’ என்று ஆர்.சி.ஜோஷி குறிப்பிட்டார்.

இந்தச் சோதனைகளில் முறைகேடுகள், மோசடி தொடர்பான பல்வேறு ஆவணங்கள் சிக்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நடைமுறைகள் பற்றி தலைமைத் தேர்தல் அதிகாரி விளக்கம்



தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வரும் 6 ஆம் திகதி நடக்கவிருக்கும் நிலையில், வேட்பாளர்கள் வாக்காளர்களுக்குப் பணம் மற்றும் பரிசுப் பொருள்களைக் கொடுப்பதாக தேர்தல் ஆணையத்துக்கு தொடர்ந்து புகார்கள் வந்து கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து கலெக்டர்களின் அவசர கூட்டம் காணொலிக் காட்சி மூலம் நேற்று மாலை நடைபெற்றது. அதில், தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு, ‘வாக்காளர்களுக்குப் பணம் மற்றும் பரிசுப் பொருள்கள் கொடுப்பதை அனைத்து மாவட்ட கலெக்டர்களும் உடனடியாகத் தடுக்க வேண்டும்’ என்று உத்தரவிட்டார்.

இந்தக் கட்டத்தில் சிறப்பு தேர்தல் கண்காணிப்பாளர்கள், வருமான வரித்துறை உயர் அதிகாரிகள், காவல் துறைக்கண்காணிப்பாளர்கள் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

‘தேர்தல் காலம் நெருங்குவதால் வாகனச் சோதனையைத் தீவிரப்படுத்த வேண்டும். வாகனச் சோதனையின் போது 10 லட்சத்துக்கு மேல் பணத்தைக் கைப்பற்றினால், வருமான வரித்துறை அதிகாரிகளுடைய விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். வங்கிகளில் பணப் பரிமாற்றத்தைக் கண்காணிக்க வேண்டும்’ என்று தலைமைத் தேர்தல் அதிகாரி இந்தக் கூட்டத்தில் அறிவுறுத்தியுள்ளார்.

‘தமிழகத்தில் தற்போது கொரோனா பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தினசரி பாதிப்பு 1,800 ஐத் தொட்டுள்ளது. அதனால் மாவட்ட தேர்தல் அதிகாரிகள், அரசியல் கட்சியினருக்கு பொதுக்கூட்டம் மற்றும் தேர்தல் பிரசாரத்துக்கு அனுமதி கொடுக்கும் போது கொரோனா தொற்றுப் பரவலை தடுக்க மத்திய, மாநில அரசுகள் விதித்துள்ள வழிகாட்டு நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்’ என்பது உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளைத் தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி வழங்கினார்.

இந்தக்கூட்டத்தின்பின்னர்சென்னை தலைமைச் செயலகத்தில் அவர் ஊடகங்களைச் சந்தித்தார். அங்கு அவர், ‘தமிழகத்தில் கொரோனாத் தொற்றுப் பரவலை தடுக்கும் வகையில் 88,937 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் பதட்டமான வாக்குச்சாவடிகள் 10,528. அவற்றில் மிகவும் பதற்றமானவை 300 என கண்டறியப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் 50 சதவீதமாக 44,758 வாக்குச்சாவடிகளில் வீடியோ கேமரா பொருத்தப்பட்டு, நேரலை மூலமாக கண்காணிக்கப்படும்.

‘வாக்குப்பதிவு காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை நடைபெறும். கடைசி ஒரு மணி நேரத்தில் கொரோனா நோயாளிகள் பி.பி.கிட். உடை அணிந்து வாக்களிக்கலாம். மற்ற பொதுமக்களும் வாக்களிக்கலாம். தேர்தல் பணியாற்றும் ஊழியர்கள் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்ள தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. ஆனால் யாரையும் கட்டாயப்படுத்தவில்லை. பதற்றமான வாக்குச்சாவடிகளில் மத்திய அரசு அதிகாரிகளின் மேற்பார்வையில் வாக்குப்பதிவு நடைபெறும்’ என்று தேர்தல் ஏற்பாடுகள் பற்றி தகவல் தெரிவித்தார்.

## 54 இந்திய மீனவர்கள் சிறை பிடிப்பு – படகுகள் பறிமுதல் இலங்கைக் கடற்படையினர் மீது மீனவர்கள் புகார் மனு



இராமேஸ்வரம், ஜெகதாபட்டினம் மற்றும் காரைக்காலைச் சேர்ந்த மீனவர்கள் 54 பேரை இலங்கைக் கடற்படையினர் சிறை பிடித்துச் சென்ற சம்பவம் கடலோர மாவட்ட மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் இருந்து 300இற்கும் அதிகமான விசைப்படகுகளில் மீனவர்கள் நேற்று முன்தினம் பாக் ஜலசந்தி கடலில் மீன் பிடிக்கச் சென்றனர். இரவு மீன் பிடித்துக் கொண்டு இருந்தபோது ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர், திடீரென மீனவர்கள் மீது கற்களை சரமாரியாக வீசித் தாக்குதல் நடத்தி விரட்டியடித்ததாக கரை திரும்பிய மீனவர்கள் கூறியுள்ளனர்.

மேலும் 2 விசைப்படகுகளில் இருந்த மீனவர்களான மரியசிங்கம் (39), ராபின்சன் (42), பிராங்க்ளின் (22), சுப்ரிட் (27), சோனைமுத்து (42), சக்தி (32), ஜான் (19), சிவா (40), கதிர் (30) உள்ளிட்ட 20 மீனவர்களை சிறைப்பிடித்துச் சென்றதாகவும் அவர்களது 2 படகுகளையும் பறிமுதல் செய்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையினரின் இந்தத் தாக்குதலில் மீனவர்கள் சிலர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக ராமேஸ்வரம் மீன்வளத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுபோன்று புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாபட்டினத்தைச் சேர்ந்த 20 மீனவர்களையும் 2 படகுகளையும் காரைக்கால் பகுதியை சேர்ந்த 14 மீனவர்களையும் அவர்களது படகையும் நேற்று முன்தினம் இரவு இலங்கை கடற்படையினர் சிறை பிடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மொத்தம் 5 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதோடு சிறைப் பிடிக்கப்பட்ட மீனவர்கள் 54 பேரையும் தலைமன்னார், காரைநகர், திருகோணமலை போன்ற இடங்களில் உள்ள கடற்படை முகாம்களில் படகிலேயே தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

54 மீனவர்கள் படகுகளுடன் சிறைப் பிடிக்கப்பட்ட சம்பவம் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களிலும் புதுச்சேரியிலும் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுபற்றி தகவல் அறிந்ததும் அக்கரைப்பேட்டை மீனவ கிராமத் தலைவர்கள் நாகை கலெக்டர் பிரவீன் பி.நாயரைச் சந்தித்து மனு கொடுத்துள்ளனர். பின்னர் நாகை மாவட்ட ஒருங்கிணைந்த மீன்வளத்துறை அதிகாரிகளிடம் அவர்கள் தங்கள் மனுவினைக் கையளித்தனர்.

இராமநாதபுரம் எம்.பி. நவாஸ்கனி இந்தச் சம்பவங்கள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், “நம் நாட்டின் மீனவர்களை தொடர்ந்து இது போன்ற துயரத்தில் இலங்கைக் கடற்படை ஆழ்த்தி வருகிறது. நமது நாட்டின் ஒரு பகுதியாக இருந்த கச்சதீவை அரசு மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதன் மூலம் இப்பிரச்சினை தீர வழி பிறக்கும். மேலும், கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் உடனடியாக மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கைத் தூதரகத்திடம் நமது கண்டனத்தை பதிவு செய்ய வேண்டும்” என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் புயலில் சிக்கி 5 பேர் உயிரிழப்பு

கொரோனா பாதிப்புக்கு மத்தியில் அமெரிக்காவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த புயலில் சிக்கி 5 பேர் உயிரிழந்தனர்.

புயலின் எதிரொலியால் அலபாமா நகரில் பயங்கர சூறாவளியும் அதனைத் தொடர்ந்து மழையும் பெய்தது. இதனால் நூற்றுக்கணக்கான மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் வேரோடு சாய்ந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டதால் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் இருளில் மூழ்கின. மேலும் இரண்டு புயல்கள் உருவாக வாய்ப்பிருப்பதால் பொது மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி, வானிலை ஆய்வாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.



## பத்திரிகையாளர் ஜமால் கஷோகியின் கொலை விசாரணை

# ஐ.நா. விசாரணையாளர் ஆக்னஸுக்கு சவுதி தரப்பில் இருந்து மிரட்டல் வந்தமை உண்மையே: ஐ.நா.மனித உரிமை கவுன்ஸில்



பத்திரிகையாளர் ஜமால் கஷோகியின் கொலை குறித்து விசாரணை நடத்திய ஐ.நா.சுதந்திர விசாரணையாளர் ஆக்னஸ் காலாமார்டுக்கு, சவுதி அரசு உயர் அதிகாரி கொலை மிரட்டல் விடுத்தார் என்ற தகவலை ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் உறுதி செய்துள்ளது.

சவுதி பட்டத்து இளவரசரும், நிழல் மன்னருமான முகம்மது பின் சல்மானின் உத்தரவுப்படியே கஷோகி கெய்ரோவில் வைத்து கொடூரமாக கொல்லப்பட்டார் என அமெரிக்க உளவுத்துறை கூறியது பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில், கஷோகி கொலை குறித்து விசாரணை நடத்திய தம்மை, சவுதி தரப்பில் இருந்து மிரட்டியதாக ஆக்னஸ் கூறியது அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

ஆக்னசிஸின் குற்றச்சாட்டு உண்மை என ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் செய்தித் தொடர்பாளர் ரூபர்ட் கோவில்லே (Rupert Colville) கூறியுள்ளார்.

# 2024 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிடுவேன் – ஜோ பைடன்



அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பதவி ஏற்றபின் முதன் முறையாக வெள்ளை மாளிகையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு அவர் அளித்த பதில் வருமாறு:-

நான் அமெரிக்க ஜனாதிபதியாக பதவி ஏற்ற பிறகு மக்களுக்காகவும், நாட்டின் நலனுக்காகவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டு நடைபெறும் அமெரிக்க அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிடுவதே எனது இலக்கு. எனது எதிர்பார்ப்பும் அதுதான்.

நான் மீண்டும் வெற்றி பெற்று அமெரிக்க அதிபராவேன் என்ற நம்பிக்கை உள்ளது. கமலா ஹாரிஸ் 2 ஆவது முறையாக அமெரிக்க துணை ஜனாதிபதியாக தேர்வு செய்யப்படுவார் என்றும் முழுமையாக எதிர்பார்க்கிறேன்.

# சுயெஸ் கால்வாயில் விபத்துக்குள்ளாகி நிற்கும் எவர்கிவன் கப்பல் கப்டன் உட்பட 25 ஊழியர்களும் பாதுகாப்பாக இருப்பதாக அறிவிப்பு

சுயெஸ் கால்வாயில் விபத்துக்குள்ளாகி நிற்கும் எவர்கிவன் கப்பலின் கேப்டன் உள்ளிட்ட அத்தனை பேரும் இந்தியர்கள் தான். இவர்கள், அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர்.

ஜப்பானின் ஷொய் கின் காய்சா நிறுவனத்துக்கு சொந்தமான எவர்கிவன் கப்பல் தாய்வான் நாட்டின் எவர்கிரீன் மரைன் கார்ப்பரேசன் நிறுவனம் குத்தகைக்கு எடுத்துள்ளது. இந்த கப்பல் சீனாவில் இருந்து நெதர்லாந்தின் ராட்டர்டாம் நகரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, கடந்த 23 ஆம் தேதி கடுமையான புழுதி புயல் காரணமாக சுயெஸ் கால்வாயில் விபத்துக்குள்ளானது. கால்வாயை மறித்துக் கொண்டு குறுக்கு நெடுக்காக கப்பல் நிற்பதால் இந்த கடல்வழிப்பாதையில் போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த கப்பலை இயக்கிய கப்டன் உள்ளிட்ட 25 பேரும் இந்தியர்கள்தான். இவர்கள் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியர்கள் தவிர கப்பலில் இருந்த சூயஸ் கால்வாய் நிர்வாகத்தைச் சேர்ந்த எகிப்து நாட்டை சேர்ந்த இரு பைலட்டுகளும் பாதுகாப்பாக இருக்கின்றனர். முதல்கட்ட விசாரணையில், கப்பலில் தொழில்நுட்ப கோளாறுகளோ, என்ஜின் கோளாறுகளோ விபத்துக்கு காரணம் இல்லை என்பது தெரிய வந்துள்ளது. இதுவரை கப்பலில் எண்ணெய்கசிவு ஏற்படவில்லை என்பது ஆறுதலிக்க கூடிய செய்தி. சூயஸ் கால்வாயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதால், தற்போது, வரை 206 கப்பல்கள் டிராபிக்கில் மாட்டிக் கொண்டு நிற்கின்றன. சுயெஸ் கால்வாயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதால், கப்பல்கள் ஆபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையை சுற்றி ஐரோப்பாவுக்கு செல்ல வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. இதனால், கூடுதலாக




2 வாரங்கள் பயணகாலம் ஆகும் என்று சொல்லப்படுகிறது.

ஷொய் கின் காய்சா நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள அத்தனை பேரிடத்திலும் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது போன்ற விபத்துகளில் சிக்கும் கப்பல்களை மீட்பதில் திறைமையான நெதர்லாந்து நாட்டின் போகாலிஸ் நிறுவ னத்தை சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் விரைவில் சுயெஸ் கால்வாய்க்கு வந்துள்ளனர். இதனால், கப்பலை மீட்கும் பணி துரிதமாக நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 2018 ஆம் ஆண்டு பயன்பாட்டுக்கு வந்த எவர்கிவன் கப்பல் 400 மீற்றர் நீளமும் 59 மீற்றர் அகலமும் கொண்டது. அதாவது எம்பயர் ஸ்டேட் கட்டத்தை விட நீளமானது. உலகின் மிகப் பெரிய சரக்குக்கப்பல்களில் இதுவும் ஒன்று. ஒரே சமயத்தில் 20,000 கண்டெய்னர்களை ஏற்றி செல்லும் திறன் படைத்தது.மணிக்கு 22.8 நாள் வேகத்தில் செல்லக் கூடியது.

# கொரோனாவால் நிதி நெருக்கடி மத குருக்களுக்கு சம்பளம் வெட்டு

## போப் ஆண்டவர் உத்தரவு

கொரோனா வைரஸ் பெருந்தொற்று நோயால் உலக நாடுகள் அனைத்தும் பொருளாதார ரீதியில் பெரும்பாதிப்புகளை சந்தித்து வருகின்றன. இதற்கு வாடிகனும் விதிவிலக்கல்ல.

வாடிகனில் கொரோனாவால் அருங்காட்சியகங்கள், புனித தலங்கள், சுற்றுலா தலங்கள் மூடப்பட்டு உள்ளன. இதனால் இந்த ஆண்டு 50 மில்லியன் பவுண்ட் (சுமார் ரூ.500 கோடி) வருமான இழப்பு ஏற்படும் என கணிக்கப்பட்டுள்ளது.

இந்த வருமான இழப்பு காரணமாக கார்டினல்களுக்கும், பிற மத குருக்களுக்கும் சம்பள வெட்டு உத்தரவை போப் ஆண்டவர் பிரான்சிஸ் பிறப்பித்துள்ளார். இது ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைக்கு வருகிறது. கார்டினல்களை பொறுத்தமட்டில் இந்த சம்பள வெட்டு 10 சதவீத அளவில் இருக்கும். அவர்கள் தற்போது மாதம் 5,000 பவுண்ட் வரையில் (சுமார் ரூ.5 லட்சம்) மாதச்சம்பளம் பெறுகின்றனர் என தகவல்கள் கூறுகின்றன. மத குருக்களுக்கு 3 சதவீதம் முதல் 8 சதவீதம் வரையில் சம்பள குறைப்பு செய்யப்படுகிறது.




இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலீபா ஆட்சியை இலங்கையில் உருவாக்கும் எண்ணம் உள்ளது

## பிள்ளையான் கருத்து



கலீபா ஆட்சியை இலங்கையில் உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் கிழக்கில் ஒரு சில இளைஞர் மத்தியில் உள்ளது எனவும் வெளிநாடுகளில் இயங்கும் அடிப்படைவாத அமைப்புகள் இலங்கையிலும் பெயர் மாற்றப்பட்டு இயங்கிக்கொண்டுள்ளதாகவும் ஆளும் கட்சி உறுப்பினர் பிள்ளையான் எனப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

எமது நாட்டில் கடந்த காலத்தில் எமது இனத்துக்குள் ஏற்பட்ட அதிகார போராட்டம் பயங்கரவாதமாக மாற்றம்பெற்று பெரும் யுத்தத்திற்கும் நாம் முகங்கொடுத்துள்ள நிலையில் சர்வதேச நாடுகளும் இலங்கையை அழுத்தங்களுக்கு உட்படுத்தும் நிலையில் எமது நாட்டு மக்களுக்கு ஏதேனும் நன்மைகள் நடந்தால் நல்லதென்ற நிலையிலேயே நான் உள்ளேன்.

அதே போல் ஈஸ்டர் தாக்குதல் குறித்த இந்த விவாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை முக்கிய விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறு இருப்பினும் கடந்த நல்லாட்சி அரசாங்கமே இந்த தாக்குதல் நடத்த காரணமாகும்.

வெளிநாட்டு உந்துதல்கள், மத ரீதியிலான ஆக்கிரமிப்புகள் இலங்கையின் ஆட்சி சூழலில் சரியாக பயன்படுத்திக்கொண்டது என்பதே உண்மையாகும்.

எவ்வாறு இருப்பினும் இது மிக மோசமானதாக்குதலாகும். இவ்வாறு இன்னொரு சம்பவம் இடம்பெறக்கூடாது.

அதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆணைக்குழுவின் அறிக்கையில் முக்கிய விடயங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இன்று இஸ்லாத்தில் இருக்கும் வஹாப்வாத கொள்கையே பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கிக்கொண்டுள்ளது.

கலீபா ஆட்சியை இலங்கையில் உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் கிழக்கில் ஒரு சில இளைஞர் மத்தியில் உள்ளது.

அதனை நிறுத்தி இந்த கூட்டத்தை சரியாக கையாள வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடம் உள்ளது.

அதற்காக ஒட்டுமொத்த இஸ்லாமியர்களையும் இலக்கு வைக்கக்கூடாது. இன்று வெளிநாடுகளில் இயங்கும் அடிப்படைவாத அமைப்புகள் இலங்கையிலும் பெயர் மாற்றப்பட்டு இயங்கிக்கொண்டுள்ளது.

எனவே இவற்றை சரியாக கையாண்டு நாட்டைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

எமது பகுதியில் உள்ள பிராந்திய பள்ளிவாசல்கள் கூட பிற்போக்கான கருத்துக்களை சமூகத்தில் விதைத்து குழப்பங்களை ஏற்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

எனவே மத ரீதியிலான முரண்பாடுகளை ஏற்படுத்தாத சூழல் எதிர்காலத்தில் உருவாக வேண்டும் என்றார்

## பஸ்வண்டியில் ஹெரோயின் போதைப்பொருள் கடத்திய இளைஞர் ஒருவர் கைது

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலடி பகுதியில் வைத்து நேற்று வியாழக்கிழமை மாலை ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வாழைச்சேனை பொலிஸாருடன் இணைந்து நாவலடி இராணுவ சோதசை சாவடியில் வைத்து கொழும்பில் இருந்து கல்முனை நோக்கி பயணித்த பஸ்ஸில் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இதன்போது 5,020 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள்களுடன் காத்தான்குடியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே நாவலடி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் வகையில் வாழைச்சேனை இராணுவ புலனாய்வுப் பிரிவினர், வாழைச்சேனை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசத்தில் போதை வியாபாரத்தையும், பாவனையையும் இல்லாதொழிக்கும் நோக்கில் இராணுவ புலனாய்வு பிரிவினர், விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் மேற்கொண்டு வரும் செயற்பாட்டுக்கு மக்கள் பாராட்டு தெரிவிக்கின்றனர்.

## இளம் குடும்பஸ்தர் தூக்கிட்டு தற்கொலை

### களுதாவளையில் சம்பவம்

மட்டக்களப்பு, மார்ச் 26

இளம் குடும்பஸ்தர் தனது கைபட எழுதிய கடிதம் ஒன்றினை எழுதி வைத்து விட்டு தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுவாஞ்சிகுடி பொலிஸ்பிரிவிற்குட்பட்ட கல்லடி வீதி களுதாவளை பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான (36) வயதுடைய திருச்செல்வம் மைகரன் என்பவர் தனது மனைவியினை பிரிந்து வாழ்ந்து வந்த நிலையில் தனது வெற்றிலைத்தோட்டத்தில் யாரும் இல்லாத நிலையில் தனது கைபட எழுதிய கடிதம் ஒன்றினை எழுதி வைத்துவிட்டு தனக்குத்தானே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட நிலையில் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் எழுதிய கடிதத்தில் 'என்னை மன்னித்து விடுங்கள், யாருக்கும் பாரமாக இருக்க விரும்பவில்லை' என எழுதியுள்ளார்.

களுவாஞ்சிகுடி நீதிமன்ற நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனையின் பின்னர் பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

சம்பவம்பற்றிய மேலதிகவிசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காத்தான்குடியைச் சேர்ந்த இருவர் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது

தீவிரவாதத்தை ஊக்குவிக்க முயன்ற குற்றச்சாட்டில் மேலும் இரு சந்தேக நபர்களை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

அதன்படி மாத்தளை பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய நபர் ஒருவர் நேற்றைய தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தீவிரவாதத்தை பரப்பியதற்காக ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து டிசெம்பர் 5 ஆம் திகதி இவர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்.

தீவிரவாதத்தை ஊக்குவிப்பதற்காக ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள இலங்கையர்களிடமிருந்து நிதி சேகரித்ததாகவும், சமூக ஊடகங்கள் மற்றும் பிற வலையமைப்புகளினூடாக தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தை ஊக்குவிக்க இலங்கைக்கு நிதி அனுப்பியதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதேவேளை சமூக ஊடகங்களில் பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தை பரப்பிய குற்றச்சாட்டுக்காக காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய நபர் ஒருவரும் நேற்றைய தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாஷிமின் நெருங்கிய தொடர்புடையவராக சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளுக்காக இருவரையும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் டி.ஐ.டி. தடுத்து வைத்துள்ளது.

# கல்முனை வித்தியாலயத்தில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு



டெங்கு நுளம்பு பரவலை கட்டுப்படுத்தும் முகமாக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.ஆர்.எம்.அஸ்மி அவர்களின் வழிகாட்டலில் ,மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் ஏ.எம்.பாறுக் அவர்களின் நெறிப்படுத்தலில் சுகாதாரப் பரிசோதகர் எம்.ஜுனைதினின் ஏற்பாட்டில் கல்முனை அல் - அஸ்ஹர் வித்தியாலயத்தில் மாபெரும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு வேலைத்திட்டமொன்று நேற்று இடம்பெற்றது.

மாணவர்கள் மத்தியில் வித்தியாசமான முறையில் இவ் விழிப்புணர்வு செயல்திட்டம் இடம்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மாணவர்களை தங்கள் வீட்டிலும் ,வீட்டுக்கு வெளியிலும் உள்ள டெங்கு நுளம்பு பெருகக் கூடிய பொருள்களை அதிகமாக கொண்டு வரும் மாணவர்களுக்குப் பரிசுப் பொருள்கள் வழங்கப்படும் என ஊக்குவிக்கப்படுவதுடன் அதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் கடந்த ஒரு வாரமாக வழங்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்கள் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய அனைத்துப் பொருள்களையும் கொண்டு வந்தனர்.

இது தொடர்பில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் டெங்கு பரவும் முறைகள் பற்றி மாணவர்களுக்கு விழிப்புணர்வு இடம் பெற்றதுடன் பின்னர் கொண்டுவரப்பட்ட பொருள்கள் யாவும் கல்முனை மாநகர சபை திண்மக் கழிவு அகற்றல் பிரிவு மூலம் அகற்றப்பட்டது.

இந் நிகழ்வில் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் கல்முனை அல் - அஸ்ஹர் வித்தியாலய அதிபர் ஏ.எச்.அலி அக்பர், அவர்களுக்கும் அங்கு கடமை புரியும் ஆசிரியர்கள் தனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர் .

## டெங்கு தாக்கம் தீவிரம் காரைதீவில் புகைவிசிறல்



கிழக்கில் சமகாலத்தில் மழை பொழிந்து வருவதனால் டெங்கின் தாக்கம் மீண்டும் தீவிரமாகிவருகிறது என சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது.

டெங்குத் தாக்கத்தை கட்டுப்படுத்துமுகமாக சுகாதாரவைத்திய அதிகாரிகள் புகைவிசிறும் செயற்பாடுகள், வீடுவீடாகச் சோதனையிடும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீரின் ஏற்பாட்டில் டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ள 3இடங்களைச்சுற்றி புகைவிசிறும் நடவடிக்கையை முடுக்கிவிட்டுள்ளார்.

பிரதம பொதுச் சுகாதாரப்பரிசோதகர் சா.வேல்முருகு தலைமையில் நேற்று காரைதீவில் டெங்குத் தடுப்பிற்கான புகை விசிறும் நடவடிக்கை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

காரைதீவுப்பிரதேசத்தில் இம்மாதத்தில் மட்டும் 3டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனரென்றும் இவ்வருடம் ஆறு நோயாளிகள் இனங்காணப்பட்டதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# 3 ஆவது போட்டியிலும் நியூசிலாந்து வெற்றி

பங்களாதேஷ் - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியிலும் வெற்றிபெற்ற நியூசிலாந்து, தொடரை 3 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

இன்று நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 318 ஓட்டங்களைக் குவித்தது. டெவொன் கொன்வே 126 ஓட்டங்களையும் டரில் மிச்செல் ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களையும் பெற்றனர். ருபெல் ஹொசைன் 70 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பதிலளித்துத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, 42.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களை மட்டுமே பெற்று 164 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. மஹ்முதுல்லா ஆட்டமிழக்காது 76 ஓட்டங்களைப் பெற்றார். நியூசிலாந்தின் ஜேம்ஸ் நீம், மட் ஹென்றி இருவரும் தலா 27 ஓட்டங்களை மட்டும் விட்டுக் கொடுத்து 5, 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இன்றைய போட்டி மற்றும் தொடரின் நாயகனாக நியூசிலாந்தின் டொவொன் கொன்வே தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான 3 இருபதுக்கு இருபது போட்டிகள் கொண்ட தொடர் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## டோக்கியோ – 2020 ஒலிம்பிக் சுடர் ஓட்டம் நேற்று ஆரம்பம்

ஜப்பானில் நடைபெற உள்ள 'டோக்கியோ - 2020' ஒலிம்பிக் போட்டிக்கு முன்னோட்டமாக ஒலிம்பிக் சுடர் ஓட்டம் தொடங்கியுள்ளது.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஒலிம்பிக் போட்டி ஜூலை 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதற்கு முன்னோட்டமாக பராம்பரிய ஒலிம்பிக் சுடர் ஓட்டம் நேற்று தொடங்கியது.

அணு உலை வெடிப்பு, ஆழிப்பேரலை போன்றவை காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்ட ஜப்பானின் வடகிழக்கு நகரம் புகுஷிமாவில் நேற்று நடைபெற்ற விழாவில் ஒலிம்பிக் சுடர் ஓட்டம் ஆரம்பமானது. முதலில் ஜப்பான் கால்பந்து வீராங்கனை அசுசா இவாஷிமிசு ஒலிம்பிக் சுடரை ஏற்றினார். தொடர்ந்து விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் ஒலிம்பிக் சுடரை ஏந்தி ஓட ஆரம்பித்துள்ளனர்.

நேற்றைய விழாவில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டியின் தலைவர் செய்கோ ஹஷிமோடோ, விளையாட்டுலகப் பிரபலங்கள், முக்கிய பிரமுகர்கள் போன்றோர் பங்கேற்றனர்.

கொரோனா அச்சுறுத்தலுக்கு இடையில் கடுமையான விதிமுறைகளுடன் ஒலிம்பிக் சுடர் தொடர் ஓட்டம் 121 நாள்களுக்கு ஜப்பானின் முக்கிய நகரங்களின் வழியாக நடைபெறவுள்ளது. இறுதியில் ஒலிம்பிக் போட்டி நடைபெறும் டோக்கியோ நகரை அது சென்றடையும்.

கொரோனா அச்சம், ஊரடங்குகள் காரணமாக கடந்த ஆண்டு ஜூலையில் தொடங்க வேண்டிய ஒலிம்பிக் போட்டி இந்த ஆண்டுக்குத் தள்ளி வைக்கப்பட்டது. ஆனால் பண்டைய ஒலிம்பிக் போட்டிகள் நடந்த கிரீசில் இருந்து ஒலிம்பிக் சுடர் கடந்த ஆண்டு மார்ச் மாதமே ஜப்பானுக்கு வந்து சேர்ந்து விட்டமை குறிப்பிடத்தக்கது.

இயற்கை, செயற்கைப் பேரிடர்களால் அதிகம் பாதிக்கப்பட்ட புகுஷிமாவில் இருந்து ஒலிம்பிக் சுடர் ஓட்டம் தொடங்கியிருப்பது, அந்த நாட்டு மக்களிடையே புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.



## சர்ச்சையில் சிக்கியுள்ள இந்திய பரா தடகளப்போட்டிகள்



மாற்றுத்திறனாளிகளுக்கான இந்திய தேசிய பரா தடகள சம்பியன் போட்டிகள் பெங்களூரில் நடக்கின்றன. டோக்கியோ பரா ஒலிம்பிக் போட்டிக்கு தகுதிச் சுற்றாகக் கருதப்படும் இந்தப் போட்டிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் முறையாகக் கடைப்பிடிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அத்துடன், இரவு நேரத்தில் மைதான ஒளிவிளக்குகள் இன்றி கார் மற்றும் டோர்ச் விளக்குகள் வெளிச்சத்தில் போட்டிகள் நடாத்தப்பட்டுள்ளமையும் தெரியவந்திருக்கிறது.

இந்த விடயங்கள் சமூக ஊடகங்களில் வைரலாகி சர்ச்சையைக் கிளப்பி உள்ளன.



## இந்தியா – இங்கிலாந்து இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 3 ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் கொண்ட தொடரின் இரண்டாவது போட்டி இன்று புனேயில் நடைபெறுகிறது.

முதலாவது போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றுள்ள நிலையில் இன்றைய போட்டி, தொடரின் சம்பியனைத் தீர்மானிப்பதாக அமையவுள்ளது.

முதலாவது போட்டியில் தோள்பட்டையில் உபாதைக்குள்ளான இந்தியாவின் ஷ்ரேயாஸ் ஐயரும், விரலில் காயமடைந்த இங்கிலாந்து அணித்தலைவரான ஒயின் மோர்கனும் தொடரிலிருந்து விலகியுள்ளனர்.

மோர்கனுக்குப் பதிலாக ஜோஸ் பட்லர் இன்று இங்கிலாந்துக்குத் தலைமை தாங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி யாழ். வர்த்தகர்கள் செயற்படவேண்டும்!

## வணிகர் சங்கத் தலைவர் ஜெயசேகரம் வற்புறுத்தல்



யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துவரும் கொரோனா பரவலில் இருந்து வர்த்தகர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள, சுகாதார நடைமுறைகளை பின்பற்றி செயற்படவேண்டும் என யாழ் வணிகர் கழகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

தற்போது யாழ் நகரில் கொரோனா தொற்றுப் பரவல் அதிகரித்துள்ளமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே ஆர். ஜெயசேகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

யாழ். நகர் சந்தைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் போது கொரோனாத் தொற்றென இனங்காணப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது.

எனவே தற்போது பண்டிகைக் காலம் என்பதால் பொதுமக்கள் வியாபார நடவடிக்கைகளுக்குச் செல்லும் போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சமூக இடைவெளிகளைப் பேணிதமதுவியாபாரசெயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

அத்தோடு வியாபார நிலைய உரிமையாளர்கள் மற்றும் வியாபார ஸ்தானங்களில் கடமையாற்றுவோர் ஏற்கனவே சுகாதார பிரிவினரால் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுவதன் மூலமே இந்த கொரோனாத் தொற்றில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

தற்போதைய நிலையில் கொரோனாத் தொற்று நிலைமை யாழ் குடாநாட்டில் அதிகரித்து காணப்படுகின்றது எனவே யாழ் குடாநாட்டை முடக்க வேண்டிய நிலைகூட ஏற்படலாம் எனவே பொதுமக்கள், வர்த்தகர்கள் இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். - எனத் தெரிவித்துள்ளார்.

## 72 நீதிபதிகளுக்கு இடமாற்ற உத்தரவு!

72 நீதிபதிகளுக்கு இடமாற்றம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீதி சேவைகள் ஆணைக்குழுவினால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீதவான்கள் நீதிபதிகள் உள்ளிட்ட 72 நீதித்துறையினருக்கே எதிர்வரும் 5ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இவ்வாறு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

## கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து பெண்ணின் சடலம் கண்டெடுப்பு!

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம், பிரதேசவாசிகளின் தகவலுக்கமைய நேற்று (வியாழக்கிழமை) காலை கண்டெடுக்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில், உயிரிழந்துள்ள பெண்ணின் விவரங்கள் இன்னும் கண்டறியப்படவில்லை என்பதுடன் கொலையா, தற்கொலையா என்பது தொடர்பாகப் பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன், மரண விசாரணைகளின் பின்னர், சடலம் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு வைத்திய பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

## சிங்கராஜவனப் பகுதிகளில் காடுகள் அழிக்கப்படவில்லை!

### ஆளும் தரப்பு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 26

ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சிங்கராஜா வனப்பகுதிக்கு விஜயம் செய்திருந்தனர்.

சிங்கராஜா வனப்பகுதியில் நட்சத்திர விடுதி ஒன்று அமைக்கப்பட்டு வருவதாகவும், இதன் காரணமாக சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் பல்வேறு தரப்பினரும் தொடர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

இந்தநிலையிலேயே இது தொடர்பாக ஆராயும் நோக்கில் 11 ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று அந்தப் பகுதிக்கு விஜயம் செய்துள்ளது.

இதன்போது கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை எனத் தெரிவித்துள்ளனர்.

எதிர்க்கட்சியினர் மக்களை ஏமாற்றும் வகையில் உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் எனவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

## போதைப்பொருள் பாவனை கொழும்பில் அதிகரிப்பு!

### நாமல் கவலை



கொழும்பில் போதைப்பொருள் பாவனை மிகவும் அதிகரித்து வருகின்றமை மிகவும் கவலையளிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற சமூக உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பாவனையானது குற்றச்செயலன்றி ஒரு நோயாக கருதப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வளிக்கும் சேவையை அனைத்து தரப்பினரும் ஒன்று சேர்ந்து சிறப்பாக முன்னெடுப்பார்கள் என தான் நம்புவதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர்களுக்கான சிறப்பான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதே தமது இலக்கென்றும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களை மீளச் செயற்படுத்த உரிய நடவடிக்கைகள்!

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது செயற்பாட்டில் இல்லாத விவசாய கூட்டுறவுச் சங்கங்களை மீளச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதில், மாவட்ட கமநல சேவைகள் பணிப்பாளர், மாகாண விவசாயப் பணிப்பாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள், விதை உற்பத்தித் திணைக்கள அதிகாரிகள், விதை உற்பத்தி நிலைய அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அவர் மேலும் கூறுகையில் -

மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் மாவட்ட விவசாயிகள், பண்ணையாளர்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

அதேநேரத்தில், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக, மாகாண விவசாயத் திணைக்களம் ஊடாக மற்றும் மிருக வைத்திய திணைக்களத்தின் ஊடாக யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள், சில மானியத் திட்டங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக விவசாயிகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. விவசாய அமைச்சு அதற்குரிய நிதி ஒதுக்கீடுகளை வழங்கி வருகின்றது.

குறிப்பாக கிராமத்திலே 75 வீத மான மக்கள் வசித்து வருகின்ற நிலையில் அவர்களுடைய மனைப் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்குரிய அரசாங்கத்தினுடைய கொள்கையின் அடிப்படையில் பல்வேறுபட்ட மானியத் திட்டங்கள் விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோல், வங்கிகள் ஊடாகவும் பல்வேறுபட்ட இலகு கடன்கள், வட்டி குறைந்த அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக விவசாயிகளுக்கு விளங்கப்படுத்தப்பட்டது. சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் விவசாயிகளுக்கு அதனைத் தெளிவுபடுத்த வேண்டும்.

இதேவேளை, விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளாகிய கட்டாக்காலி மாடுகள், விவசாய நிலங்கள் நிரப்பப்படுதல், அதேபோல் விவசாய நிலங்களில் சட்டவிரோத மணல் அகழ்தல், கட்டடங்கள் அமைத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் இன்று ஆராயப்பட்டது.

அதற்கு விவசாய கமநலசேவைத் திணைக்களமும் பிரதேச செயலாளர்களும் சம்பந்தப்பட்ட தரப்பினரோடு இணைந்து விவசாயிகளின் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், கடந்த போகத்தில் பெரும்போகத்தின் போதும் விவசாயிகள் எதிர்கொண்ட நட்ட விவரங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. அவர்களுக்குரிய தொழில்நுட்ப உதவிகள் மற்றும் கால்நடை உற்பத்தித் திணைக்களத்தின் நடவடிக்கைகள் விவசாயிகளைச் சென்றடைய வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கை தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அத்துடன், அரசாங்கத்தால், விவசாய அமைச்சால் அமுல்படுத்தப்படுகின்ற பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் மூலம் விவசாயிகள் பயன்பெற வேண்டும். அதேநேரத்தில் ஏற்கனவே இயங்கி, தற்போது செயற்பாட்டில் இல்லாத சில விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களையும் செயற்படுத்தி அந்தச் சங்கங்கள் ஊடாக விவசாயிகளுக்கு நன்மைகளை ஏற்படுத்த வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. - என்று குறிப்பிட்டுள்ளார்.

**வீடு வாடகைக்கு உண்டு**

**நல்லூர் கோவிலுக்கு அண்மையில் புதியவீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.**

**தொடர்புகளுக்கு: 0777977924**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.03.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org